**O.S. 82/2016 , 21.04.2021, 03.10 pm - 03.30 pm**

**வா.சா.1, மாணிக்கம், த/பெ.லேட்.முனிசாமி**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

எனக்கு எழுத, படிக்க தெரியாது. நான் எத்தனை வழக்கு நீதிமன்றத்தில் நடத்தி கொண்டிருக்கிறேன் என்றால் 3 வழக்கு நடத்தி கொண்டிருக்கிறேன். இந்த நீதிமன்றத்தில் யார் மீது என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியுமா என்றால் வெங்கடேசன் என்பவர் மீது வழி மற்றும் சொத்து குறித்து தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் உள்ள சொத்து விவரம் யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய பெயரில் உள்ளது. என்ன நிவாரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்தில் தொடர்ந்து பிரதிவாதிகள் தொல்லை கொடுப்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 165/5 1 ஏக்கர் 16 செண்ட் நிலமாகும். என்னுடைய சொத்தும், பிரதிவாதியின் சொத்தும் வெவ்வேறு என்றால் சரிதான். நான் பிரதிவாதி வகையறாவிடமிருந்து நான் எந்த சொத்தும் வாங்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அனுபவத்தில் இருக்கும் சொத்து எத்தனை தலைமுறையாக உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்தை எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்றால் 1999 ஆகும். கோவிந்தசாமி என்பவரிமிருந்து கிரையம் பெற்றேன். சொத்து அளவு இப்பொழுது உள்ளது தான் கோவிந்தசாமியிடமிருந்து பெற்ற சொத்தா என்றா இல்லை. கோவிந்தசாமியிடமிருந்து 1ஏக்கரா 16 செண்ட் நிலம் தான் வாங்கினேன் அது பூமியில் குறைவாக உள்ளது. எவ்வளவு குறைவாக உள்ளது என்றால் 3 செண்ட் நிலம் குறைவாக உள்ளது. தாவா சொத்தை கோவிந்தசாமியிடமிருந்து கிரையம் வாங்கும்போது அளந்து வாங்கினேனா என்றால் இல்லை. எதற்காக அளவீடு செய்யவில்லை என்றால் பட்டா, பத்திரத்தில் உள்ளபடி வாங்கிகொண்டேன் ஏதும் குறைவு இல்லை என்பதால் அளவீடு செய்யவில்லை. இதுநாள்வரை தாவா சொத்தை நான் அளவீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அளவீடு செய்தோம். வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து சர்வேயர் வந்து அளவீடு செய்தார். மேற்படி சங்கதியை வழக்கில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சர்வேயர் அளந்த பிறகு என்ன கூறினார் என்றால் சர்வேயர் அளந்து கல் போடும் சமயத்தில் போடக்கூடாது என்று பிரச்சனை செய்தார், அளவீடு செய்யாமல் நிறுத்தப்பட்டுவிட்டது. எந்த வருடம் தாவா சொத்தை அளவீடு செய்தேன் என்றால் 2014ல் அளவீடு செய்தேன். இடைப்பட்ட வருடத்தில் எதற்காக தாவா சொத்தை அளவீடு செய்யவில்லை என்றால் யாரும் தொந்தரவு கொடுக்காததால் அளவீடு செய்யவில்லை. தாவா சொத்தின் நான்குபுற எல்லைகள் எனக்கு தெரியும். இரண்டு பக்கம் சொத்து வைத்துள்ளவர்கள் மட்டும் அளக்கும்பொழுது தொந்தரவு செய்தார்கள். பிரதிவாதிகள் அவர்களுடைய சொத்தில் அவர்களுடைய முதாதையர் காலத்திலிருந்து இருக்கிறார்கள் என்று சொன்னால் தெரியாது. தொல்லை கொடுத்த இரண்டு பக்கத்து சொத்துக்காரர்களை வழக்கின் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். யார் யாரை சேர்த்துள்ளேன் என்றால் பிரதிவாதி மற்றும் பாரி, உமாசங்கர், இன்பு, அமுதா, வேலாயுதம், வள்ளி ஆகும். பிரதிவாதியின்

சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் சொத்து முக்கோண வடிவத்தில் உள்ளது என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் வரைபடத்தை பார்த்து கூறுகிறேன், சொத்தை அளக்கவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.